# சுதந்திர தினத்தை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கான போட்டி

## சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் ஏற்பாடு

**சென்னை, ஆக.11:** சுதந்திர தின விழாவை முன்னிட்டு, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில் பள்ளி மாணவர்களுக்கான போட்டி மற்றும் இந்தியா 75 இளைஞர் மாநாடு நடைபெறவுள்ளது.

நாட்டின் 75 -ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்படவுள்ளது. இதைமுன்னிட்டு, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், சென்னையில் உள்ள இந்திய தொழில் துறை கூட்டமைப்பின் யங் இந்தியன்ஸ் ஆகியவை சார்பில், 1-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கானபள்ளிகளுக்குஇடையிலான போட்டிகள் நடைபெறவுள்ளன. இதுதவிர, கல்லூரி மாணவர்களுக்கான "இந்தியா-75 இளைஞர் மாநாடு" மற்றும் சென்னை தினத்தை (ஆக.22) கொண்டாடும் வகையில், 'சென்னை காட் டேலண்ட்' போட்டிகள் என பல்வேறு நிகழ்ச்சிகள் இணையவழியில்நடைபெறவுள்ளன.தற்போது பள்ளிகளுக்கு இடையிலான போட்டிகள் மற்றும் சென்னை காட் டேலண்ட் ஆகியவற்றுக்கான பதிவுகள் நடைபெற்று வருகின்றன. பள்ளிகளுக்கு இடையிலான போட்டிகளுக்கான பதிவுகள் வியாழக்கிழமை (ஆக12) முடிவடைகிறது. சென்னை காட் டேலண்டிற்கான பதிவுகள் ஆகஸ்ட் 15-ஆம் தேதி முடிவடைகிறது. "இந்தியா -75 இளைஞர் மாநாடு" போட்டி ஆகஸ்ட் 12-ஆம் தேதி முடிவடைகிறது.

இந்த போட்டிகளில் பங்குப் பெறவிருப்பம்உள்ளவர்கள் பதிவு செய்ய கூடுதல் விவரங்களுக்கு கீழேஉள்ளஇணைப்புகளைகிளிக் செய்யவும். பள்ளிகளுக்கு இடையிலான போட்டிக்கு https://yiyuva.in/school/ இணைப்பை கிளிக் செய்யவும். இந்தியா-75 இளைஞர் மாநாடு போட்டிக்கு https://youngindians.glueup.com/event/youth-conclave-the-future-41514/ இணைப்பை கிளிக் செய்யவும். சென்னை காட் டேலண்ட் போட்டியில் பதிவு செய்ய மற்றும் விடியோ பதிவேற்றம் செய்ய https://yiyuva.in/cgt/ இணைப்பை கிளிக் செய்யவும். மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் இணையவழியில் நடைபெறும் இந்த போட்டிகளில் பங்குபெற வேண்டும் என சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.